மின்சார பற்றாக்குறையைப் போக்க இங்கே நிறைய அனல் மின் நிலையங்களை உருவாக்க வேண்டும். கல்பாக்கம் அணு மின் நிலையத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்னும் தேவையான அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யவும். விநியோகம் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி எதை எடுத்தாலும் இன்றைக்கு பற்றாக்குறையாக இருக்கிறது. பற்றாக்குறையின் உச்சக் கட்டத்திற்கு நாம் போய் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நீங்கள் என்ன செய்தாலும் எதைப் போட்டாலும் 'பாட்டம்லெஸ் பிட்டிங்' போல இருப்பதினால் கீழே போய்விடும், கண்டுபிடிக்க முடியாது. உங்களால் தாங்க முடியாது. மத்திய சர்க்காரை கேளுங்கள். கொடுக்கவில்லை என்றால் மக்களைத் திரட்டி, மக்கள் சக்தியை மத்திய சர்க்காருக்குக் காட்டினால்தான் அவர்களுக்குப் புரியும் அதை நீங்கள் செய்யவில்லை என்றால் நீங்கள் சொல்லக்கூடிய வார்த்தைகளை காப்பாற்ற முடியாது உங்கள் திட்டத்தை நிறைவேற்ற முடியாது அடிப்படை இல்லாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

9. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பெற்றன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

5-2-1983 (சனிக்கிழமை) ..	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
6-2-1983 .. (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை
7-2-1983 .. (திங்கட்கிழமை) ..	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1981–82ம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் விவாதம்,
8-2-1983 (செவ்வாய்க் .. கிழமை) 9-2-1983 (புதன் கிழமை)	அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

10–2–1983 .. (வியாழக்கிழமை)	காலை—தனியார் அலுவல்கள் மாலை—அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறை வற்றலும்
11–2–1983 .. (வெள்ளிக்கிழமை) 12–2–1983 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன் வடிவுகள். ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம் போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5-2-1983 காலை 9.00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவைபிற்பகல் 1.29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

132. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18.10.1982 ஆம் தேதியிடப்பட்ட உள்துறையின் 2590–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

133. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட முறைப் படுத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 27.9.1982–ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2474-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் (9) 1955/10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1951) 619–அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் திருத்திய உரை (தமிழ்) ஆங்கிலம்)